உ

கடவுள் துணை.

கோவிந்தசதகம்,

இஃது

திருத்தணிகைச்

சரவணப்பெருமாலியரவர்கள்

பிரதிக்கிணங்க

குவளைமாநகரம்

சீநிவர்சமுதலியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு,

பரமசிவமங்கலம்

முநிசாமிமுதலியாரவர்களால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை-அணை-சை.

MADRAS:

PRINTED AT THE LYCEUM PRESS.

1861.

கட்வுள் துணை.

கோவிந்தசதகம்.

காப்பு.

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான் ...*
என்று மெனக்கே பிராணவான் - என்றும்... ... *
பிறவாத பேராளன் பேராயிரமும்... ... ...*
மறவாம னெஞ்சமே வாழ்த்து... ... ... *

மாவேழங் கூப்பிட வந்தாயுல கழக்கச்சொல்லில்
பாவேற வேயுனக் கோர்சத கஞ்சொலப் பாரதியேன்
றேவேற வாழ்த்துகின் றேனெனைக் காத்தரு ணன்முகற்குங்
கோவேசக்ராயுத னேயச்சு தானந்த கோவிந்தனே. (க)

செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீங்குசெய் வானைத் துரந்தர சாளவிந்தப்
படிக்கொரு மன்னருண் டாலு மழுது பயிரிடமக்
குடிக்கொரு சேதமுண் டோவச்சு தானந்த கோவிந்தனே. (உ)

கட்டாண்மை வேந்தர் பெருமை யெண்ணுதவர் கன்னத்தடி
பட்டாலல் லாமல் வணங்கார் விடமூட்படாமற்சும்மா
தொட்டா லதைப்பிள்ளைப் பூச்சிபென் பார்மூட் கூறுகெனவே
கொட்டாமற் றேளென்ப ரோவச்சு தானந்த கோவிந்தனே. (ஊ)

பாலிட்டமாகிய நீர்போற் கலந்து பகருங்கல்வி
நூலிட்ட கேள்விக்கு ளாவார்நல் லோரிரு நூறுதரம்
மேலிட்ட புத்திசொன் னலுங் கயவர்க்கு வீற்றபுண்ணில்
கோலிட்டவர்றெருக்கு மேயச்சு தானந்த கோவிந்தனே. (எ)

கழுக்கட்டை யேற்றினுங் காசொன் றிலையெனக் கைவிரித்தே
மழுக்கட்டி யேந்தவல் லாளத்தொழிலிடைமன்னர்வைத்தால்
மூழுக்கட்டி பேர்த்துக் கிழங்குண்ணும் பன்றி முகந்தனிலே
கொழுக்கட்டி விட்டதொப்பாம்ச்சு தானந்த கோவிந்தனே. (ஏ)

நீலங் கவர்விடப் பாம்பைப் பிடார னியமிக்கவே
ஆலங் கரந்திட் டெலியுடன் வாழ்த லரசர்க்கஞ்சிக்
காலங் கருதி வலியா ரொளியரைக் காண்கில னு
கூலரைப் போலிருப் பாரச்சு தானந்த கோவிந்தனே. (சு)

தடுப்பார் புலியையும் பாம்பையும்வாய்க்கட்டித்தாங்கிக்கையால்
எடுப்பார் மழுவைய நீர்மே னடப்ப ரெவருமெச்ச
அடுப்பார் சபையினி னூற்றெட்டடிக் கம்பத் தாடுவர்பொன்
கொடுப்பா ரரியுர்கண்டா யச்சுதா னந்த கோவிந்தனே. (எ)

ஆலிக்க வாழ்ந்துண் டிருந்தாலு மென்ன வயன்வகுத்த
சோலிக் கணக்கின் படிதப்புமோ நளன் றெல்புவியும்
சாலிக்கு நேர்தன் மனையுமிழந்தொரு சாரதியாய்
கூலிக்கும் வேலை செய்தா னச்சுதானந்த கோவிந்தனே. (அ)

எடுத்தாலு மூறு மிறைத்தாலு மூறு மிடைநடுவே
தடுத்தாற் றடைபடுமோமனற் கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாவாழ்விக்குஞ் செல்வமுண்டானவரள்ளிச்செம்பொன்
கொடுத்தாற் குறைவருமோ வச்சுதானந்த கோவிந்தனே. (கூ)

னந்தா யெனச்சென் றிரப்பவர்க் கீபவ ரெவ்வளவு
தந்தாலு நல்லதிகழ வொண்ணு தெங்குஞ் சஞ்சரித்து
வந்தாற் பெருகுங் குளத்துக்குப் பெய்யுமழைத்துளிகள்
குந்தாணிப் போற்பெய்யுமோ வச்சுதானந்த கோவிந்தனே. (ஙு)

பீடார் குலத்தினி லாகாத பிள்ளையைப் பெற்றெடுத்தால்
வாடாதும் வாடிக் குலநாச மாய்விடு மாறுபடத்
தாடாண்மை யாளர்கைக் குள்ளாய் தருக்குலஞ் சாயவெட்டும்
கோடாலிக் காம்பல்ல வோவச்சு தானந்த கோவிந்தனே. (ஙூ)

எடுத்தாலும் பிச்சை யழுதுநன்றே யில்லை யென்னிலுயிர்
விடுத்தாலும் வாசிதட் பிலரார் மனையில் விருந்தெனப்போய்
அடுத்தாவ தேதரைக் காசுக்குப் போம்வெட்க மாயிரம்பொன்
கொடுத்தாலுந் தான்வருமோ வச்சு தானந்த கோவிந்தனே. (ஙூ)

உணத்தக்க நன்மருந் தாற்பிணிபோ மென்றுலகி லுள்ளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப்பார் விடம்பாய்ந்துசெத்த
பிணத்துக்கும்பச்சிலை யுண்டு புல்லோர்க்குப் பிறக்குமவ
குணத்துக்குச்சொன் மருந்தே தச்சுதா னந்தகோவிந்தனே. (ஙூ)

மலைப்பாற் குறுமுனி போற்றும்புலவர்வடித்ததமிழ்
விலைப்பாற்படுத்திக்கொள்வார்க்குண்டுகீர்த்திவிதண்டைசெய்து[று
கலைப்பார்க்கும்பேய்கொண்டநாய்களைப்போற்பல்லைக்காட்டிநின்
குலைப்பார்க்குங்கீர்த்தியுண்டோவச்சுதானந்தகோவிந்தனே. (யச)

தமத்தி லொளிவிடும் பொற்பூஷிணங் கடலைச்சுமையாச்
சுமக்கினு மாதர்க் கழகீகா கனவன் றொடாதிருந்தால்
கமத்திப் பொதிச்சுமை யாச்சுமந் தாலுங் கழுதையுங்குங்
குமத்தின் மணங்கொள்ளுமோவச்சு தானந்தகோவிந்தனே (யரு)

உடுப்பாருண்பார்தமைப் போனினையாரொரு வன்பிழப்பைக்
கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்குமென்றேசொல்லக்கேட்டிருந்து
விடுப்பாரன் றேபுல்லர் தூர்க்குணமுற்றுவிதரணத்தால் [ம்
கொடுப்பார் தமைத்தடுப்பா ரச்சுதானந்த கோவிந்தனே. (யசு)

நாட்டம் பணத்தில்வைக் குங்கள்ளலோபர்நன் ஞட்டவர்கள்
ஈட்டந்தனைக்கண்டு கிட்டுவரோ விரா தேடிமனத்
தோட்டம் புகுநரி யஞ்சாமனெஞ்சந் துணிந்துசந்தைக்
கூட்டந் தனில்வரு மோவச்சுதானந்தகோவிந்தனே. (யஎ)

இறைமு றையேழைக் குடிகளை நோகச்செய் தென்பசும்பொன்
அறையிடும் பொக்கிஷந் தானிரம் பாதர சற்கியல்போ
நிறைகடற் கென்ன குறைவோ வளப்படி நீரிறைத்துக்
குறைவறச் செய்பவ ராரச்சுதானந்த கோவிந்தனே. (யஅ)

கிட்டி யொருவன் றலைக்குளிரத்நங் கிளைத்துதென்னூல்
வெட்டி வெளிசெய்ய வேணுமென் றேவிரும் பார்பெரியோர்
எட்டின மாத்திரம் புத்தியில்லா ருருதின்ற தென்னூல்
கொட்டிவுட் கட்டுமென் பாரச்சுதானந்த கோவிந்தனே. (யகூ)

சலத்தால் விளைகின்ற சிப்பியின்வாய் முத்தின் றற்குலத்தைச்
சொலத்தா னெவரு மிகழார்ரசர் தொகுத்தணிவார்
அலத்தா மதரறி வில்லார் சனனங்க ளாகியநற்
குலத்தாற் பெருமையெண் ணுரச்சுதானந்த கோவிந்தனே. (உய)

களிப்பாற் றுரைக ளறிவினாலாக்கைப்பிடித்துச்செல்வம்
அளிப்பாரன் றேபின் னகைக்கிட மாமொன்று மாவதில்லா
வெளிப்பாற் றிரிகின்ற நாய்க்குலந் தன்னைநல் வீட்டினிடைக்
குளிப்பாட்டிவைத்தனவாமச்சுதானந்தகோவிந்தனே. (உக)

ஒச்சம்பிடி மேனி யுருக்கொண்ட தெய்வத்தை தெண்டனிட்டு
நம்பிட வேண்டும் வரம்பெற லாநம்பினோர்க்குதவா
வம்பிடி லோபத் துரைத்தனப்பேய்களே மன்னனென்று
கும்பிட வுந்தகு மோவச்சு தானந்தகோவிந்தனே. (உஉ)

வரங்கா தலிக்குந் தவமுடை யார்வங் கணமெவர்க்கும்
உரங்காணு நன்மை பெறலாங் கயவ ருடன்கலந்தால்
அரங்கார் சபையிடைத் தாதன்கரத்தி லகப்பட்டதோர்
குரங்கா யிலவர்கண் டாயச்சு தானந்தகோவிந்தனே. (உங)

சோட்டைப் புணர்ந்து ரணவேட்டையாடித் துரைகள்தங்கள்
நாட்டைப் புரப்பது ஞாயங்கொடுப்பது ஞாயமன்றே
வீட்டுக் குணம்பி யடைக்கலச் சிட்டிவெண் முட்டையிடும்
கூட்டைக் குலைப்பர்க ளோவச்சு தானந்தகோவிந்தனே. (உச)

சடத்துக் கழகென்பர் தான்கற்ற கல்வியத் தன்மையல்லால்
இடத்தக்க பூஷணந் தானணியாவிடி லேசுவரோ
புடத்திற் படத்தங் கக்கட்டி யுருக்கிப்பொருந்தியபொன்
குடத்துக்குப் பொட்டழகே னச்சு தானந்தகோவிந்தனே. (உடு)

படியாளு மன்னர் மநுநீதி தப்பும் படிநடந்தால்
விடியாது நாடு மழை பொழியாது விளைவுகுன்றும்
பொடியார் பசும்பொன் னெருப்பெழக்காயுமுப் பூவிளைந்துங்
குடியா திருக்கவல் லாரச்சு தானந்த கோவிந்தனே. (உசு)

பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக் கழகு மயிலுங் குயிலுங் கண்டாய்கமலப்
பூவுக் கழகு மணமூந் திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகு செங்கோலச்சு தானந்த கோவிந்தனே. (உஎ)

மட்டுப்படாத வனுமாரசோக வனமழித்துக்
கட்டுப் பட்டாரித் திரசயித் தாற்சர்த்தின் காரியத்தால்
முட்டுப் பட்டாலுஞ் சயங்கொள்ளவேண்டும் பொன்மோதிரக்கைகீ
குட்டுப்பட் டாற்குறை யோவச்சு தானந்தகோவிந்தனே. (உஅ)

இயல்புடன் றிக்குவிசயங்கொள்வேந்தர்க் கென்றுமுமப
செயம்வருங் காலந் திரிவாரவர்திரு வுந்திறமும்
புயபலமுங் தெடும் விக்கிர மாதித்தன் போர்பொரப்போய்க்
குயவன்கை யான்மடிந்தா னச்சுதானந்தகோவிந்தனே. (உக)

வள்ளாடும் வாணியர் செக்கடித் தண்டிடு மீனொன்றும்
விள்ளா ரவர்க்குப் பலிஷ-வந்தானித்தம் வேலைசெய்யத்
தள்ளா தடிபடும் வெள்ளாட்டி மேற்சின்ன தங்கும்பிடி
கொள்ளாமற் போவதுண் டோவச்சு தானந்த கோவிந்தனே. (க)

சலிக்கக் கணக்கென்ன தான்பெற்ற பிள்ளைக்குத் தாய்மூலைப்பால்
ஒலிக்கக் கனிந்தழ வூட்டிவளர்ப்பள் பின்னூழ் வினையால்
பலிக்குட் படிலன்னை யென்செய்வள் பாக்கியம் பாலடையில்
குலுக்கிப் புகட்டு வளோவச்சு தானந்த கோவிந்தனே. (கக)

தளத்தைக் கண்டஞ்சக்கு றுமன்னர் கப்பந் தரச்சொல்வர்போர்க்
களத்துட்படவவர் சீமையை வேந்தர்கைக் கொண்டழித்தால்
விளைத்திட்ட மீன்களைக் காகம் பருந்து விருந்துண்ணவே
குளத்தைக் கலக்கிய தாமச்சு தானந்த கோவிந்தனே. (கஉ)

தோட்டியைப் போலுழைப் பார்பொருட்டேடித் தொகைபெரு
பூட்டியறைக்குட் புதைத்து வைப்பார் புகியாரவர்க்கும் [க்கிப்
ஈட்டிய தேனைப் பலபூவினிற் சென்றெடுத் தெடுத்துக்
கூட்டி விழப்பனவா மச்சு தானந்த கோவிந்தனே. (கங)

சொல்லைப் புரட்டுங் கொடுங்கோன் மணியத்திற்றேஷிமெண்ணூர்
கல்லற் படுத்திக் குடிகளை நோகக் கணக்கெழுதி
எல்லைக்கு ளான நிலம்பாழ் படிற்பிடித் தேருழுத
கொல்லைக் கடமை விடாரச்சு தானந்த கோவிந்தனே. (கச)

இட்டு நோற்றுப் பிறந்தார் செல்வ முற்று மிராதவதிப்
பட்டு நூற்றுக்கு மிருந்துழைத் தாலும் பவுஷிப்பதுமோ
விட்டு நோக்குங் கப்பலோடியுமே விடியாமனையில்
கொட்டை நூற்றே விடியும் மச்சு தானந்த கோவிந்தனே. (கடு)

நிறைந்தே வருங்கப்ப லாயிரந் தன்னினின் றேர்கப்பலுன்
மறைந்தே திசைதப்பிற் றுழ்வென்றெண்ணூர்மிக்கவர்த்தகர்காட்
டுறைந்தே வளர்புள்ளி மானுக் குடம்பி லொருபுள்ளிதான்
குறைந்தே தல்லா திருந்தே தச்சு தானந்த கோவிந்தனே. (கஎ)

ஒளித்தா லுந் தூர்க்குணம் போமோ குருவுப தேசமந்த்ரம்
அளித்தா லும் புல்லர் நல்லோ ரர்வமோசென் றடுத்தடுத்துக்
களித்தா யிரந்தரங் காகங்கள் வீழ்ந்து கங்காநதியில்
குளித்தா லு மன்னமொவ்வா வச்சுதா னந்த கோவிந்தனே. (கஅ)

தருவிப்பர் மன்னர்கள் கையினைத் தாமெனத் தம்மை நம்பி
மருவித் திரியுஞ் சனங்கள்பசி கொண்டிவாட்டமெய்தார்
பருவக் குறிப்பின்றிச் சாவிபட்டாலும் பயிர்க்கொல்லையில்
குருவிக் கிரைபஞ்ச் மோவச்சு தானந்த கோவிந்தனே. (நஅ)

மொழியின் படிநட வாடன் கணவனை மோசஞ் செய்து
பழியுஞ் சுமக்கும் படிசெய்வ னெம்பப் படாள்விசிகம்
பொழியுஞ் சமரிடை ராவுத்தனைத் தள்ளிப் போட்டசுவம்
குழியும் பறித்தன வாமச்சு தானந்த கோவிந்தனே. (நக)

அடித்தமு தூட்டி வளர்த்திடுந் தாய்தன் னகமெலிவாய்
மிடித்திடிற் றான்பெற்ற பிள்ளைகளைக்கைவிடநினையாள்
பொடித்தெழும் பிஞ்சு திரளாகிற் பாரம் பொறுக்கும்படர்
கொடிக்கென்ன காய்தன மோவச்சு தானந்தகோவிந்தனே.(நய)

தண்டா ரணியு மரசிளம் பாலகர் தம்மை யெதிர்
கண்டாலிளைய னென்றெண்ண வொண்ணாது கண்டாயெவரும்
அண்டா தெருப்புச் சிறிதென்று முன்ரு னையின் முடிந்து
கொண்டா லதுசுடுங் காணச்சுதா னந்த கோவிந்தனே. (நக)

பிஞ்சிற்பருவ மூலவிலைப் பெண்கள் பெறும் பொருட்டால்
வஞ்சிக் கும் வித்தை குலவித்தை தானே வருமெவர்க்கும்
மிஞ்சிக் குளப்புன லீச்சுப் பழக்கிவித்தாரெவர்மீன்
குஞ்சுக்குத் தற்குணங் காணச்சுதானந்தகோவிந்தனே. (நச)

விடுபோர் முகத்தி னைகைப்பா னுஞ்சுத்த வீரர்சண்டை
யிடும்பா தொளித்துப் பிழையாம லாண்மையிலார்மதிகெட்
டடுபோர் புகழ்நீச்சலியா தவனைக்கீ ழாறிழுத்துக்
கொடுபோமவ் வாறெக்கு மேயச்சுதானந்த கோவிந்தனே. (நந)

தளிரோ யனைமெய்ப் பெண்டிர்கணவன் றனையிகழ்ந்து
வெளியே புறப்பட்டுக் கற்பழிந் தாற்குல மேன்மையுண்டோ
நளிரோ தரும்புன றேய்ந்துடம் பெங்கு நனைந்ததற்பின்
குளிர்தப் பாலென்பரோ யச்சுதானந்தகோவிந்தனே. (நச)

சோற்றுக் கடன்கொண் டிருக்குஞ் சரீரந் தொலையுநில்லா
தாற்றுப் புனலின் குமிழிபென் றேங்கி யலைவர் கொல்லோ
நூற்றுக் கிருப்பவர்க் கைம்பதிற் சாவில்லை நூற்றுக்கப்பால்
கூற்றுக் கிரையென் றெண்ணு ரச்சுதா னந்தகோவிந்தனே. (நசு)

நன்றிசெய் தாரென்றறியாமற் றீங்கு நமக்குச் செய்தா
ரென்று முனிய வொண் ணுதுகுழந்தை யிளந்தசையைத்
தின்றெதிர் வந்தது கீரியென் றந்தணன் றேவிமுன்னுள்
கொன்ற பழங்கதை யாமச்சு தானந்த கோவிந்தனே. (சசு)

அடிகொண்ட வெந்திட்ட கோட்டை யரணஞ்செய் தாரிருப்பக்
கெடிகொண்ட வேந்தர்கைக்கொள்வா ரவனாப்பின்கிட்டவொட்டார்
படிகொண்ட மண்ணிற் கறையா னிடும் புற்றிற்பாம்புவந்து
குடிகொண் டிருப்பது வாமச்சு தானந்த கோவிந்தனே. (சஎ)

தெட்டிப் பறிக்கின்ற வேகியர் வீட்டிற் றிரிந்தலையும்
மட்டிக் குலாமருக் காசார மேன்றெய்வ வந்தனேன்
பட்டிக் கொதுங்கி யடிபடு மூர்க்கரும் பன்றியிட்ட
குட்டிக் கொருசந்தி யேனச்சு தானந்த கோவிந்தனே. (சஅ)

தடைகற்கு மூன்னங் கொடைகற்ற பேர்க்கு நடக்கை வந்தால்
புடையுற் றெவருந் துதிக்க வணங்கிப் புகழ்பெறுவார்
அடையப் பவிஷ்—வந் தாலற்பருக் கர்த்த ராத்திரியில்
குடையைப் பிடியென்பர் காணச்சு தானந்த கோவிந்தனே. (சகூ)

கண்டனைக் கேற்ற வளாய்க்குல மானதற் கற்பினளாய்த்
தெண்டனைக் கஞ்சி நடப்ப வளாய்மணஞ் செய்வதல்லால்
பிண்டமுந் துண்டமு நேர்ந்தே பிடாரியைப் பெண்டுவைத்துக்
கொண்டவன் பேயனன் றேவச்சு தானந்த கோவிந்தனே. (சுய)

பொடிச்செல்வம் யாசகச் செல்வங் கொடுமை பொருட்செல்வமோ
நொடிச்செல்வ மீதலில்லாச் செல்வம் வீண்செல்வ நூற்றுக்குமே
பிடிச்செல்வ மின்றிச் சுகசீவியாய்க் கொழு பீதிகொண்ட
குடிச்செல்வ மேசெல்வங் காணச்சுதானந்தகோவிந்தனே. (சுக)

வண்டானது மெள்ளப் பூமணங்கொள்ளும் வகையதுபோல்
பெண்டாசை யுள்ளவர் காம்சம்போகம் பெறுவ தல்லால்
கண்டா தரவின் மலரொடுத் தேகசக் காமுகந்து
கொண்டான் மணந்தரு மோவச்சு தானந்தகோவிந்தனே. (சுஉ)

அண்டினர்க் கீபவர் தாமே தருவதல் லாரிரப்போர்
தெண்டனைக் காகக் கொடுப்ப துண் டோசெழுங்காய்மரத்தில்
கண்டிடி னஃதைக் கனியாத முன்னங் கனியைக்கல்லால்
கொண்டடித் தாற்கவை யோவச்சு தானந்த கோவிந்தனே. (சுங)

விடுப்பார் பிழைக்கும் வழியினல் லோரன்றி வேறுபட்டக்
கெடுப்பார் வசஞ் செய்வரோ நம்பி னேனைக் கிளிப்பிள்ளையை
எடுப்பார் கைப்பாவளர்ப்பாரல்லா லெட்டிப் பூனையின்கைக்
கொடுப்பா ருலகிலுண் டோவச்சு தானந்த கோவிந்தனே. (நச)

உண்டான குற்றஞ் சகியாமல் வேந்தனுத் தாரமிட்டால்
கண்டோடித் தண்டனை செய்வார்க்குக் குற்றமுந்தெண்டமுண்டோ
மண்டாமல் விற்பிடித் தெய்வா ரிருக்கக்கண் டம்பைநொந்து
கொண்டாலவ் வம்பென் செயுமச்சு தானந்த கோவிந்தனே. (நடு)

வருபுத் திரவிச்சை யாற்றெய்வம் வாழ்த்திவணங்கிடுவார்
தருபுத் திரனைப் பெறிற்கா வடிகட்டித் தாய்தந்தையை
ஒருபுத் தி னுஞ் சுமந்த துண்டோ வுலகம்புகழக்
குருபுத் திரன்சுமந் தானச்சு தானந்தகோவிந்தனே. (நசு)

கதிப்பா னடத்துங் குதிரையும் யானையுங் கால்பலமும்
மதிப்பார் புகல்சுத்த வீரர்க்குச் சொர்க்கம் வருவதல்லால்
துதிப்பார்க்குங்கொக்கரிப்பார்க்குமுண்டோ துணிந்தேதெருப்பில்
குதிப்பா ளொருத்தியன் றேவச்சு தானந்த கோவிந்தனே. (நஎ)

தரங்கிக் குவித்துத் தளருமென்னுவிக்குன் றுமனைத்தாள்
தொங்கித் தருவதெக் காலஞ் சொல்லா யெழுபாருமுண்டு
பரங்கட் டிரவினும் பாலாழிபினும் பசும்பொன்னிசூழ்
அரங்கத்தி னுந்துயில் வாயச்சு தானந்த கோவிந்தனே. (நஅ)

மஞ்சனந் தேடி மலர்தேடி யுன்னை வணங்கப்பெற்றேன்
நெஞ்சகந் தன்னி னினைக்கப் பெற்றே னினையாவிடினும்
அஞ்சலென் றென்னை யுனக்கேபரமடலாழிகொண்டு
குஞ்சரங் காத்தவனே யச்சுதானந்த கோவிந்தனே. (நகூ)

தேனே யெனுமொழி மானுர் கலவியிற் சேர்ந்துறினும்
தானே யெனக்குன் பதந்தருவா யன்று தானகிகாய்
மானே யெனவந்த மாரிசன் மேற்செலவாளிதொட்ட
கோனே சக்ராயுதனே யச்சு தானந்த கோவிந்தனே- (கூ)

சற்றே ராயுறவுற்றுரைப் பேணித்தவத்தியல்பாய்
நற்சனனங் தெரிதாரை மெச்சுவர் நாணமில்லாத்
துர்ச்சனப்பிள்ளைகட் கூரார் சொல்வார் புத்தியென்றுலகு
குற்சிதஞ் சொல்லுமெய் பேயச்சு தானந்த கோவிந்தனே. (கூக)

தெள்ளாரமுதக் கடற்கனை பெட்டிச் செழுங்கனியைப்
புள்ளானது பகிகூர்ந் தாலுமே புசியாது கண்டீர்
தள்ளாது கொள்ளிகொண் டேநின வென்று தலைசொறிந்து
கொள்ளா வெருஞ்சொன் னேனச்சு தானந்தகோவிந்தனே. (சுஉ)

மிடித்தாலு மேறப் பசித்தாலு நல்லவர் மேனைதப்பி
வடித்தா தரத்தொடு கட்குடிப் பார்மனைவாசல்புகார்
படித்தாவின் பால்கொண்டு கள்ளிறக்கும் பனங்காட்டிற்சென்று
குடித்தாற் பனங்களென்பா ரச்சு தானந்த கோவிந்தனே. (சுங)

தேறியமான முடையோர் பெருமை சிறுமையுற
மாறிய வீனவிர்த் திக்குளராய் நின்று வாழ்வொன்றில்
வீறிய பூமலர் விற்குங் கடையில் விறகுவில
கூறிய வாறுக்கு மேயச்சு தானந்த கோவிந்தனே. (சுச)

நிறைபா யசசர் தயவுசெய் தாற்கலி நீங்கியிளம்
பிறையாய் வளர்ந்து நிரம்புனல் வாழ்வு பிறியப்பட்டு
மறையால் விளங்கும் பிர்ம்மா நினைந்தால் வர்த்திக்கும்வய
குறைபா தனைச்சொல்ல ரேயச்சுதானந்த கோவிந்தனே. (சுடு)

இணக்கா திரார்வல் லிரும்பொடிந் தால்வைத் திருதலையும்
வணக்கா திரார்வின் னிமிர்ந்ததென் றுற்புல்லர் மாறுபடும்
பிணக்கார் தவிர்ப்பவர் நாய்வால நீளப்பிடித் திழுத்துக்
குணக்கா டெடுக்கவல் லாரச்சு தானந்த கோவிந்தனே. (சுசு)

தம்மின மானவர் கையினைத்தேசர ணென்றடைந்தால்
வம்மினென் றுதரிக் கத்தகுந்தள்ள வழக்கல்லவே
விம்மூமென் கொங்கை சரிந்மீத யுதரத்தின் மேல்விழுத்தாங்
கும்மெனச் சொல்லுவ ரேயச்சு தானந்த கோவிந்தனே. (சுஎ)

சதிசெயு நீலியைப் பெண்டென்று கொள்பவர் தங்கள்கெடு
மதியதுவா மவர்மேற் குறையில்லை வையாளி விட்டால்
கதிபெற வேநடவா தமைகண்ட கழுதையைற்
குதிரையென் றேற்றக்கொள் வாரச்சுதானந்தகோவிந்தனே (சுஅ)

பெண்டகு மில்லவள் வந்தமூகுர்த்தம் பெருகுஞ்செல்வம்
உண்டவர் வாழ்வு மனையிலெந்நாளு மூடிக்கப் பொற்பூண்
பண்டமிலையெனிற் பானைபிடித்தவள் பாக்கியங்காண்
கொண்டவ னென்னசெய் வானச்சுதானந்த கோவிந்தனே (சுக)

தடும்பழி காரினை வெட்டாமன் மன்னித் தனுப்பிவிட்டால்
தொடும்பழி பேச வழக்குமுண்டோ தொடந்தேபிடித்த
உடும்பது போய்யினும் போகட்டுங் கைவிடென் றுண்மைசொல்வார்
கெடும்பழி யேன் சுமப்பாரச்சு தானந்தகோவிந்தனே. (எல)

வள்ள லெனத்தருந் தாதாவென்றேதினம் வந்துவந்து
கள்ள மனத்திற் பொருள்கேட்கொணாது கண்மூர்திரளாய்
உள்ள கரும்புதித் திப்பென வேருடனே பிடுங்கிக்
கொள்ள நினைப்பர்களோ வச்சு தானந்த கோவிந்தனே. (எக)

தொடுத்திடு மூழ்வினை போகாதெவர்க்குந் தொடருமுற்றும்
இடுக்கண் வருமத னல்வருங்குற்றமு மென்பதல்லால்
தடுத்திடுங் காலினிகளந்தனைப்பற்றித்தானெடுத்துக்
கொடுத்திடும் யானைகண் டாயச்சு தானந்த கோவிந்தனே. (எஉ)

விதிமுறை நீதிச்செங் கோல் கோடத் தேசமெலிந்தலைய
மதிலரண் செய்யி லெவர்க்காகு நந்தவன மழிந்தால்
எதிரெதி ரோடி யகார்த்தவ மேயிலென்னேற் றந்தருங்
குதிரைகண் மேய்ந்திடிலென் னச்சுதா னந்த கோவிந்தனே. (எங)

செழித்திடு செல்வப் பிறந்தகம் போய்த்திரும் பாளெனவே
கழுத்திடு தாலிகையாற் கட்டினேன் பலதா னும் வந்தே
அழைத்திடக் கூட்டி விடாரேலி டையனுக் காடுநன்றாய்க்
கொழுத்திடி லாபமன்றே வச்சுதா னந்த கோவிந்தனே. (எச)

தேட்டாளர் தம்மிச்சை யாற்றேடுங் கைப்பொருடேடும்வழி
காட்டா ரெவர்க் கும்பின் வில்லங்கமாகுங் கண்மூர் கதவு
பூட்டாத பொக்கிஷ வீட்டினிற் கொள்ளைக்குப்போய்ப்புகினுங்
கூட்டாகு மோவென்ப தோயச்சுதானந்த கோவிந்தனே. (எடு)

வணங்கா ருன்பாதங்கள் வாழ்த்தாருன் னாமங்கள் வாழ்த்தினித்தம்
இணங்கா ரறிவற்ற புல்லர் நலலோர் தம்மியற்கைபெண்ணர்
கணங்கா ணுங்கட்டிக் கரும்புதின் பார்க்குக் கசப்பதுவாய்க்
குணங்கா ணெனச்சொல்வ தோயச்சுதா னந்த கோவிந்தனே. (எசு)

இடைப்படச் செத்தவன் பிள்ளை நன்றுக விருப்பவன்கை
அடைத்தலை மென்றுல கள்ளொ டுமேயது போற்றமியேன்
மிடைப்படப் பார்த்திருந் தாற்றகுமோபசு மேய்த்தவந்தாள்
குடைக்குள் டேந்தினை யேயச்சுதா னந்த கோவிந்தனே. (எஎ)

பன்றி யுடனுற வாகப்பழகினும் பாற் பசுவின்
கன்று மலத்தைப் புசிக்கு மென்பாரக் கதையதுபோல்
சென்று றவாடிக் கயவர்பின் னேதிரிந் தாலறிவு
குன்றும் வசைக்கிட மாமச்சு தானந்த கோவிந்தனே. (எஅ)

நினைத்தோத மிட்ட தினைப்பாயன் மீதினி னித்தினைகொள்
தனைத்தோகை யைவந் தெழுப்புந் தபனன் சமயமறிந்
தினைத்தோ வெனக்குக் கிடங்கூப்பிடாம லிரவிடநாய்
குனைத்தோ விடியுமென் பாரச்சு தானந்த கோவிந்தனே. (எக)

தெறிய நெஞ்சிற் பரிசுத்தனைத் தெளிந்த வந்தாள்
மாறிய வன்கண ருண்மை கொள்ளாரொரு வன்வயிற்றைப்
பீறிமூன் காட்டிட விந்திர சாலப் பிரமையெனக்
கூறிய வாறுக்கு மேயச்சு தானந்த கோவிந்தனே. (அய)

நடந்தார்க்கு நாடெங்கு நல்லுறவாகு நடை யொழிந்து
கிடந்தார்க்குப் பாய லுறவன்றி யேனென்று கேட்பவரார்
இடந்தா வெனக்குன் பதமே கதிகித் நிட்சியர்பால்
குடந்தாங் கியமூகுந் தாவச்சு தானந்த கோவிந்தனே. (அக)

தருவை யொப்பாமந் தருவென்ப தோபர சற்புருடன்
உருவை யொப்பாருத் தமராவ தோகுண மொப்பதல்லால்
கருவி யொப்பாயு யரப்பறந்தாலுங் கருடனுக்கூர்க்
குருவி யொப்பா மென்ப தோவச்சு தானந்த கோவிந்தனே: (அஉ)

ஐங்காதம் போயுமகப் பைவிலை யாக்கா சென்பர்காண்
எங்காகிலும் பணமிட்டுக்கொள்ளார் குணவீனர்சென்றால்
சிங்காரமாகிய பொற்பூ வீணற்றியாகம் பெரூர்
கொங்கார் துளபத்தனே யச்சுதா னந்த கோவிந்தனே. (அங)

வாலியைக் கொன்று சுக்ரீவனைப் பட்டத்தில் வைத்து மூந்நீர்
வேலைகடந்தன் நிலங்கையில் வீடணன் றன்னைவைத்தாய்
காலியை மேய்த்துள்ள பால்குடித்தாய் நற்கரும்பு தின்னக்
கூலி கொடுப்பவரா ரச்சுதா னந்த கோவிந்தனே. (அச)

தின்டாட வெட்டும் ரணகளத்திற் செயங் கொள்ளவழி
கண்டா லெதிர் நின்ற கூளப் படையைக்கைக் கொண்டுபுகார்
அண்டாத வெள்ளத்தி லோடம் விடாமலடி நரிவால்
கொண்டாறு நீந்துவரோ வச்சுதா னந்த கோவிந்தனே. (அஙி)

மழைக்குத் தண்ணீர் கொண்டு வார்ப்பவரா ரிந்த வையகத்தே
பிழைக்கப் பொழிவ ததன்குணங்காண் பெறும்பேற்றினுக்கே
அழைக்கக் கயேந்தான் மூலமென்றோதிய வன்பினுள்ளங்
குழைக்கக் கராவரித்தா யச்சுதா னந்த கோவிந்தனே. (அசு)

நள்ளிருட் போதில் விளக்கிட்டதா நல்லவிருந்தால்
தெள்ளிய சீர்பெறு வீட்டுக்கழகென்பர் தீங்கர் வந்தால்
தள்ளி விடாமற் குடிவைத்துக் கொள்ளத் தகாதிறப்பில்
கொள்ளி வைத்துக் கொள்வமோ வச்சுதானந்தகோவிந்தனே. (அள)

பொரக்கதீ நி கட்டிக் கொண்டேதுரை யானவர்போர்முகத்தில்
வரக்கொக் கரித்தெதி ரோடிப் பொருதில் வரும்விசயம்
அரக்கர்க் கெதிர்மலைந் தந்நாளி லங்கை யழித்ததுவும்
குரக்குப்படையல்லவோ வச்சுதானந்தகோவிந்தனே. (அஅ)

வல்லா யமர்செய் திலேதத்தாய் கைநாளே வருகவெனச்
சொல்லா திராரிளைப் பாறுமென் பார்சுத்த வீரர்படை
எல்லா மிழந்து நிராயுதனுய விராவணனைக்
கொல்லா தொருவவிட் டாயச்சுதா னந்த கோவிந்தனே. (அக)

அண்டாத தூர்க்குண வினருஞ் செல்வர்களா யிருந்தால்
கண்டாதரவி னழைத்தால் வருவர் கருணைங்கள்
உண்டாங் குழந்தையுந் தெய்வமு நித்தமுறவுசெய்து
கொண்டாட முன்னிற்கு மேயச்சுதா னந்த கோவிந்தனே. (கல)

பூணத்த கும்புகழ் பூஷிணங் கொள்ளப் பொருளுதவா
வீணர்க்குங் கீர்த்திக்கு மெத்தினை தூர மிகுஞ்செல்வராய்க்
காணத்தை யுண்ணுங் குதிரையி லேறிக் கவிக்குலம்போல்
கோணக்கொம் பேறிலென் னுமச்சு தானந்த கோவிந்தனே. (கூ)

வெஞ்சரக்குப்பை தொடுத்தெய்ய வேவெற்றிராக்வன்கைச்
செஞ்சரத்துக்கிணை யாமென்ப ரோவிட்ட தினிதின்று
சஞ்சரிக்கும்பன்றிக் குட்டிகடாமத தாளைபொங்குங்
குஞ்சரக் கன்றுக்கொவ் வாதச்சுதா னந்த கோவிந்தனே: (கூஉ)

நெஞ்சார வஞ்சகர்க் கெதினை செய்யினு நேசங்கொள்ளார்
தஞ்சாயன் மென்குயின் முட்டையைத் தன்முட்டை யாமென்றெ
எஞ்சா தடைகிடைந் தேகருங்காச மிகல்விளங்குங் [ண்ணி
குஞ்சாகிப் பூங்குயி லாமச்சுதா னந்த கோவிந்தனே. (கூங)

ஆதிய வெஞ்சினத் தீமூளச் செய்யி லரசர் கொல்வார்
தேறிய நெஞ்சிற் றனைக்கொல்ல வந்த சினப்பகைவை
மாறிடக் கொன் றிடப் பாவ மில்லையென்று வையகத்தோர்
கூறிய வார்த்தைபொய் யோவச்சு தானந்த கோவிந்தனே. (கூச)

வம்பா வசைக்கவி நூறுசொன்னாலும் வைதாலு மெண்ணூர்
தம்பாடு சொல்லி வழிவிடுவார்க டனப்புலையர்
செம்பா லடித்திடு காசொன் றுதவிசெய் யார்குதிரைக்
கொம்பா கிலும்பெற லாமச்சு தானந்த கோவிந்தனே (கூடி)

சூடவராதிட்ட பொற் பூஷணங்க டுரையெனக்கொண்
டாடவராது சதுரங்க சேனையு மாண்மையும் போம்
ஓடவ ராதெம தூதர் வந்தாலுள்ள மொக்கமுந்தன்
கூடவ ராதென்ப நோவச்சு தானந்த கோவிந்தனே. (கூசு)

தண்டா மகிழ்செயுந் தாதாக் களிலைருத் தன்மறுத்தல்
கண்டா லதுகொண்டு தாழ்வல்ல வேகறக் கும்பகர்கள்
உண்டான பாற்கறக்கும் பசுவாயிரத்தொன் றுதைத்துக்
கொண்டாற் குறையென் பதோவச்சு தானந்த கோவிந்தனே, (கூஎ)

திறமுஞ் செங்கோலு மூளமன்னர் நாட்டிற் கிந்தாகுலந்தீர்ந்
தறவுங் குடிசத மென்றிருப் பார்பயி ரிட்டுண்பர்கான்ற
அறவுங் கொடுமை செயுமன்னர் சீமைக்கு ளாரிருப்பார்
குறவன் குடியிருப் பாமச்சு தானந்த கோவிந்தனே, (கூஅ)

பல்லால் விஷிங்கக்கு நாகந்திகைத்துப் பயதொதுங்கி
நல்லார்கண் காணவந் தாலுங்கொல்லார் நண்ணலர்வரினும்
பொல்லாதவரிவரென்னூர் மனம்பொறுத் தேயவரைக்
கொல்லாமற் போமென்ப நோச்சுதானந் கோவிந்தனே (கூக)

செல்வாய்ப் படும்பணை யேட்டெழு தாமறைச்செம்மொழிபோற்
சொல்வார்சொ னம்பத்தகுமதல்லாற்சொற்புரண்டிருக்கும்
வல்வாய்ப் புலியார்சொனம்புவ தோநித்த மாடுதின்னுங்
கொல்வாருக் தாணையுண்டோ வச்சுதானந்தகோவிந்தனே (ஈ)

மூந்தச் சனனத்தில் யான்செய்தபூசை முயற்சி யிற்கோ
விந்தச்சதகம் விண்ணப்பஞ் செய்தேனென்வினை கொலைத்தேன்
இந்தச் சனனத்திற் றான்பப்படாம லிருந்திடவை
குந்தப்பதவி பெற்றேனச்சுதா னந்த கோவிந்தனே (ஈக)

கோவிந்தசதகம்-முற்றிற்று.